# கைவினை செய்வதற்கான வழிமுறைகள் - கதாநாயகரகள்

**விசுவாசத்தின் கதாநாயகர்கள், பிரிவு 2**

# சாம்சனின் கதை

**குழந்தைகள், சாம்சனின் கதையையும், அவரது வாழ்வின் பல்வேறு பகுதிகளையும் இத்தகைய வேடிக்கையான வழியில் சொல்வதில் மகிழ்ச்சி கொள்வார்கள்.**




## தேவைப்படும் பொருட்கள்

- 1 கைவினை வடிவம்
- வண்ணங்கள் (க்ரையான்கள், பேனாக்கள், முதலியன
- பசை
- பிளாஸ்டிக் நீர் அருந்தும் ஸ்ட்ரா
- பிராட் (காகித விரைவிப்பான்)
- கத்தரிக்கோல்

## வழிமுறைகள்

1. கொடுக்கப்பட்டுள்ள வரிகளினூடே கைவினை வடிவத்தை வெட்டி, படங்களுக்கு வண்ணம் தீட்டவும்.

2. காகிதத்தின் இரு வட்டங்களில் நடுவிலும், பிராடை நுழைக்கும்பொருட்டு சிறு துளை இடவும். முழுமையடைந்த வட்டமானது கீழே சென்றும், மேலும் ஒரு பக்கம் இல்லாத வட்டமானது மேல் பக்கமும் இருக்கவேண்டும், இது கீழே இருக்கும் படங்களை காண உதவும்.

3. பிளாஸ்டிக் ஸ்ட்ராவை மூன்று துண்டுகளாக வெட்டவும். ஒன்றை சாம்சனின் கண்களுக்கும், மற்ற இரண்டை மேல்வட்டத்தில் "சாம்சன்" எனும் வார்த்தைகளுக்கும் ஒட்டவும்.

4. கூடுதலாக இருக்கும் கண்களையும், "சாம்சன்" எனும் பெயரையும் வெட்டி எடுத்து, அவற்றை முப்பரிமான விளைவைக் கொடுக்கும் வண்ணம், ஸ்ட்ரா துண்டுகளுடன் ஒட்டவும்.

இப்போது சாம்சனின் கதையை கூற, நீங்கள் இதை பயன்படுத்தலாம்!

# ராயல் கிரீடம்





## தேவைப்படும் பொருட்கள்

- ஒவ்வொரு குழந்தைக்கும் கிரீட வடிவம்
- வண்ண காகிதத்தில் நான்கு பெரிய டைமண்ட் வடிவங்கள்
- மற்றொரு வேறு வண்ண காகிதத்தில் நான்கு சிறிய டைமண்ட் வடிவங்கள்
- வண்ணங்கள் (க்ரையான்கள், பேனாக்கள் முதலியன)
- பசை
- ரிப்பன் அல்லது கயிறு
- அழகு பொருட்களாக பயன்படுத்தும் வெளி வட்டுக்கள்

## வழிமுறைகள்

1. உங்கள் விருப்பமான வண்ணங்கள் கொண்டு கிரீடத்திற்கு வண்ணம் தீட்டவும்.
2. கிரீட வடிவத்தை வெட்டி எடுத்து, அதன் இரு முனைகளிலும் கயிறை இணைப்பதற்காக துளையிடவும்.
3. கிரீடத்தில் இருக்கும் வட்ட வடிவ புள்ளிகளில், அழகுக்காக பயன்படுத்தப்படும் வெள்ளி வட்டுக்களை ஒட்டவும்.
4. செங்குத்தான வரிகளுக்கு இடையே பெரிய டைமண்ட்களை ஒட்டவும். கிரீடத்தில் அணிகலன்கள் இருப்பதை குறிக்க, சிறிய டைமண்ட்களை பெரியவற்றிற்கு மேலே ஒட்டவும்.
5. கிரீடத்தின் இருமுனைகளிலும் ரிப்பன் அல்லது கயிற்றை கட்டவும், மேலும் அதைக் கொண்டு கிரீடத்தை குழந்தையின் தலையில் கட்டவும். கிரீடம் இப்போது அணிவதற்கு தயாராக உள்ளது! நீங்கள் இக்கிரீடத்தை அரசர் சவுல், டேவிட் அல்லது சாலமன் ஆகியோரின் எந்த கதைகளையும் கூற பயன்படுத்தலாம்.

# இயேசு தான் வழி (ஹேங்கர் மூலம்)

குழந்தைகள் கதவுகள் அல்லது அவர்களது வீட்டின் எந்தப் பகுதியையும் இந்த வேடிக்கையான ஹேங்கர் கொண்டு அலங்கரிப்பதில் மகிழ்வார்கள்.

## தேவைப்படும் பொருட்கள்




- 1 ஹேங்கர் வடிவம்
- வெள்ளை காகிதம் அல்லது நுரை போன்ற பொருளாலான 3 வெள்ளை மேகங்கள்
- காகிதம் அல்லது நுரை போன்ற பொருளாலான 2 பிரவுன் மாற ட்ரன்க்குகள்
- காகிதம் அல்லது நுரை போன்ற பொருளாலான 2 பச்சை மர டாப்புகள்
- நுரை போன்ற பொருளாலான அல்லது காகிதத்தாலான 8 பிரவுன் நிற பாறைகள்
- வண்ணங்கள் (க்ரையான்கள், பேனாக்கள், முதலியன)
- கத்தரிக்கோல்
- பசை

## வழிமுறைகள்

1. ஹேங்கர் வடிவத்தை வெளிப்புற வரியின் ஊடே வெட்டி எடுக்கவும். மேலே இருக்கும் வட்டத்தை வெட்டியெடுக்க மறக்காதீர்கள்.
2. உங்களது விருப்பமான வண்ணங்கள் கொண்டு காட்சிக்கு வண்ணம் தீட்டவும்.
3. இயேசுபிரானின் படத்திற்கு அருகே, வானம் இருக்கும் பகுதியில் மேகங்களை ஒட்டவும்.
4. பாறைகளை நடைபாதையில் ஒட்டவும்.
5. இறுதியாக, நடைபாதையில் மரங்கள் இருக்குமாறு காண்பிக்கும்பொருட்டு, மர ட்ரங்குகள் மற்றும் மர டாப்புகளை ஒட்டவும்.

இப்போது கைவினை, வீட்டிற்கு எடுத்துச் செல்ல தயாராக உள்ளது. அதை உங்களது கதவின் தாழ்ப்பாள் அல்லது வீட்டில் எங்கு வேண்டுமானாலும் தொங்கவிட்டிடுங்கள்!